**இராணிப்பேட்டை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்.**

**ப.மு.எண்.7081/அ1/ 2023, நாள்: 16.12.2024.**

பொருள் :- தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழு - 24.07.2022 அன்று நடைபெற்ற தொகுதி IV தேர்வு-தேர்வாணையம் மூலம் நேரடி நியமனம் செய்யப்பட்டவர்கள்- இராணிப்பேட்டை மாவட்டம், குடிமல்லூர் அரசு உயர்நிலைப்பள்ளி - இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.சே.அஜித்குமார் என்பாருக்கு பணிவரன்முறை செய்ய கோருதல் - சார்பு.

Rec. 23/12/24

பார்வை :-

1. அரசாணை(நிலை) எண்.151, பள்ளிக் கல்வித் (பக.1-1)துறை நாள்.09.09.2022.
2. சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.56703/அ4/இ1/2023, நாள்.21.09.2023.
3. இராணிப்பேட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.07081/அ1/2023, நாள்.27.09.2023.
4. இராணிப்பேட்டை மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) கடித ந.க.எண்.2798/அ1/2024, நாள்.25.11.2024.

#####

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 24.07.2022 அன்று நடைபெற்ற தொகுதி IV தேர்வின் மூலம் நேரடி நியமனம் செய்யப்பட்டு இளநிலை உதவியாளராக பணிபுரியும் கீழ்க்காணும் பணியாளருக்கு அன்னாரின் பெயருக்கெதிரே குறிப்பிட்ட நாள் முதல் பார்வை(1)ல் முதல் (3)ல் காணும் அரசாணை மற்றும் செயல்முறைகளின் படியும் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் பெயர் மற்றும் பணிபுரியும் பள்ளியின் பெயர் | இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள். | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 01 | சே.அஜித்குமார், இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப் பள்ளி, குடிமல்லூர். இராணிப்பேட்டை மாவட்டம். | 29.09.2023 முற்பகல் | 29.09.2023 முற்பகல் |

(த.பி.பா)

பணிவரன் முறைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து பணி முடித்து துறைத் தேர்வுகள் மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சி முடித்து தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்ய வேண்டுமென்று ஆணையிடப்படுகிறது. மேலும் தகுதிகாண் பருவம் முடித்தமைக்கான ஆணை வழங்கப்பட்ட பின்னரே இரண்டாம் ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்பட வேண்டும்.

மேற்காண் பொருள் சார்ந்து அன்னாரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ளுமாறும், பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்கவும் சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியருக்கு தெரிவிக்கலாகிறது.

இணைப்பு- பணிப்பதிவேடு

முதன்மைக்கல்வி அலுவலர்,
இராணிப்பேட்டை.

பெறுநர்

சார்ந்த பணியாளர்கள்(தலைமையாசிரியர் மூலமாக)

நகல்

1. மாவட்டக்கல்வி அலுவலர்,
   மாவட்டக்கல்வி அலுவலகம்(இடைநிலை),
   இராணிப்பேட்டை.
2. தலைமையாசிரியர்,
   அரசு உயர்நிலைப் பள்ளி, குடிமல்லூர்.